**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-10022025-9825

Volume: 10

Issue: 2

Month: October

Year: 2025

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 29.08.2025

Accepted: 27.09.2025

Published: 01.10.2025

Citation:
Sivalingam, R., & Sankara Narayanan, K. (2025). Grammatical Necessity and Origin – A Historical Perspective. *Shanlax International Journal of Tamil Research, 10*(2), 115–123.

DOI:
https://doi.org/10.34293/tamil.v10i2.9825

*Corresponding Author:
sivaphd23@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Grammatical Necessity and Origin – A Historical Perspective

**R. Sivalingam**
*Ph.D. Research Scholar, Sangappalagai for Tamil Development*
*University of Madras, Chennai*
*https://orcid.org/0009-0002-0299-1525*

**K. Sankara Narayanan**
*Assistant Professor & Head of the Department*
*Sangappalagai for Tamil Development, University of Madras, Chennai*
*https://orcid.org/0000-0002-6260-8164*

**Abstract**
*Since ancient times, the origin of grammar has been created from literature. The origin of this grammar is the language of the people, called the dialect, and the literary forms used by the people, called poetry. The grammarians who tried to understand the system of the language, through their intelligence, have developed into grammar. The roots of the grammarians who created such grammar are different, and the grammars created and recited by them through the hereditary tradition are taught with their religious background stories that came after it. From a linguistic perspective, the grammar based on the structure of the language has two different periods. Grammar emerged from literature and later, through the grammar that was formed, new literatures have been formed. The origin of literature was formed in the land where the dialect and poetry of the language were formed through folk literatures. The people of that land created grammar to see the structure of their language. It is believed that a foreigner who came on behalf of a religious and political background dared to see the structure of the language due to ideology and rule and created the first grammar and then the grammar developed. This study is a study on the original origin of grammar.*

***Keywords:*** *Tradition, Agathiyam, Panini, Tamil Language, Vadamozhi, Lord Shiva, Tolkappiyam, First Book, Guide Book, Grammar, Literature, Jainism, Saivism, Christianity, Monasteries*

**References**

1. Iraiyanar Kalaviyal – Nakkhirar's text. Tirunelveli South Indian Saiva Sinthantha Book Publishing House -1953
2. Ramasubramaniam.V.T. - Kamba Ramayanam Moolamum Textum (Aranya Kandam) Thirumagal Nilayam.-2009
3. U.V.Sami Nathayar - Silappadhikara Moolamum Arumpadhauraiyum Adiyarkunallaruraiyum, U.V.Sami Nathayar Book Publishing House -2013
4. Sirpi Balasubramaniam, Neela Padmanaban (P.A) – New Tamil Literary History, Sahitya Akademi Publication, Third Edition -2019.
5. Damodaran.A (P.A) – Iraiyanar Kalaviyal – Central Institute of Classical Tamil Studies, 2013
6. N.M. Venkataswamy Nattar - Thiruvilayadal Puranam: Moolamumuraiyum, Deepam Publication -2024

7. Namakkal Poet's Text - Thirukkural, Poompuhar Publishing House, 2010.
8. Pavalareru Balasundaram .S. - Tholkappiyam Research Commentary, 5 volumes, Periyar University, Salem -11, February 2012.
9. Moses Ponnaiya - Nannool Research Commentary - Zion Publishing House -1971.

# இலக்கணத் தேவையும் தோற்றமும் – ஒரு வரலாற்றுப் பார்வை

***இரா. சிவலிங்கம்***
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்மேம்பாட்டுச் சங்கப்பலகை
சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை

***முனைவர் கி. சங்கர நாராயணன்***
உதவிப் பேராசிரியர் துறைத்தலைவர்
தமிழ் மேம்பாட்டுச் சங்கப்பலகை
சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை

***ஆய்வுச் சுருக்கம்***
*பழங்காலந்தொட்டே இலக்கணத் தோற்றத்தை இலக்கியத்தினின்று படைக்கப்பட்டதென்றும். இவ்விலக்கணத்தின் தோற்றம் மொழியின் வழக்கு எனும் மக்களின் வழக்காகவும், செய்யுள் என்னும் மக்கள் பயன்படுத்திய இலக்கிய வகைகளாகவும் அமைந்துள்ளன. மொழியின் முறையை அறிய முற்பட்ட இலக்கணிகள் தன் நுண்ணறிவு வழிப்பட்டு தெளிந்த மொழியின் நூலாக்க நெறியே இலக்கணமாக வளர்த்துள்ளனர். அவ்வகையான இலக்கணத்தைப் படைத்த இலக்கணிகளின் வேர்நிலம் வேறாகவும், அவர்களால் படைத்து ஓதுவிக்கப்பட்ட கர்ணப்பரம்பரை மரபின் வழியாகத் தளைத்த இலக்கணங்கள் அதன் பின்னோடு வந்த தம் சமயப்பின்னணிக் கதைகளையும் கொண்டு கற்பிக்கப்பட்டு வருகிறது. மொழியியல் பார்வையின் அடிப்படையில் மொழியின் அமைப்பியல் சார்ந்த இலக்கணம் இருவேறு காலகட்டத்தைத் தன்னுள் கொண்டுள்ளது. இலக்கியத்தினின்று இலக்கணம் தோன்றி பின் உருவான இலக்கணத்தின் வழிப் புத்திலக்கியங்கள் ஆக்கம் பெறுகின்ற நிலை உருவாகியுள்ளது. இலக்கியங்களின் தோற்றத்தை நாட்டுப்புற இலக்கியங்களின் வழி மொழியின் வழக்கும் செய்யுளும் நிலத்தின் அளவில் அமைந்ததாகவும். அந்நிலத்தார் தம் மொழியின் அமைப்பைக் காண எண்ணி இலக்கணம் படைத்திலர். சமயம், ஆட்சி பின்புலத்தின் சார்பில் வந்த வேற்றுநிலத்தவரே கொள்கை, ஆட்சி காரணமாக அம்மொழியின் அமைப்பினைக் காண துணிந்து முதல் இலக்கணத்தைப் படைத்த பின் இலக்கணம் வளர்ச்சி அடைந்திருக்கும். அவ்வகையில் இவ்வாய்வு இலக்கணத்தின் ஆதி தோற்றத்தைப் பற்றி ஆய்வதாக அமைகிறது.*

***திறவுச் சொற்கள்:*** *மரபு, அகத்தியம், பாணினி, தமிழ்மொழி, வடமொழி, சிவபெருமான், தொல்காப்பியம், முதல்நூல், வழிநூல், இலக்கணம், இலக்கியம், சமணம், சைவம், கிறித்துவம், மடங்கள்.*

## முன்னுரை

இலக்கிய ஆக்கம் நாட்டுப்புறவியலின் அடித்தொட்டு தோன்றுவது என்பதும் நாட்டுப்புற இலக்கியங்களே செவ்விலக் கியங்களின் தோற்றுவாய் என்பதும் இலக்கிய திறனாய்வாளர்களின் முடிவாக அமைந்துள்ளது. மனிதனின் இன்ப, துன்ப, வீர, தீர செயல்களை மற்றவருக்கு அறிவிக்கும் கருவியாக, இசையொத்த பாடல்களை உருவாக்கினான். அவை வாய்மொழி இலக்கியங்களாகப் பல்கி பெருகி செழுமையுற்று இலக்கியங்களாக உருபெற்றுள்ளன. ஆனால் சுவைக்காத இலக்கணங்கள் உருவாக காரணம் என்ன? அவற்றை இன்புற்று இலக்கியம் பாடும் கவிஞர்களே படைத்தனரா? என்பதில் எல்லாம் எப்பொழுதும் ஐயம் எழுவதுண்டு. அதே வேளையில் இலக்கணம் என்பதன் அடிப்படை, இலக்கியமாக அமைகின்றதை

**இலக்கியம் இன்றி இலக்கணம் இன்றே;**
**எள்ளின் றாகில் எண்ணெயும் இன்றே;**
**எள்ளினின்று எண்ணெய் எடுப்பது போல**
**இலக்கியத் தினின்றும் எடுபடும் இலக்கணம்**
**அகத்தியர்: பேரகத்தியத் திரட்டு**

எனப் பேரகத்தியத்திரட்டு கூறுகிறது. அகத்தியம் என மயங்குதல் இன்றி நூல் தோற்றத்திற்கான காரணியை மரபுசார் நிலையில் ஆய்வோமானால் இலக்கணத் தோற்றம் நமக்கு விளங்கும். நாட்டுப்புற இலக்கியங்கள் மக்களின் உடல், உளம் சார்ந்த தோற்றப்புலத்தில் உருவாகும். இதனையே "வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்" எனக் கூறுகிறார் பனம்பாரணார். அவற்றின் வெகுசனப் பயன்பாட்டு நிலை ஒரு புதிய பண்பாட்டினை உருவாக்கும். பண்பாட்டின் நிலையிலிருந்து அவ்விலக்கியம் அம்மக்களின் வாழ்வியல் விழுமிய கோட்பாடுகளைத் தன்னகத்தே கொண்டு செவ்விலக்கிய நிலையை எய்தும் என்பதை இலக்கியத் தோற்ற நிலையாக நாம் கொள்ளலாம். அவ்வகையில் இலக்கணத் தோற்றத்தை ஆய்வோமானால் மொழியியல் கோட்பாடுகளின் வழி, மொழியினைக் கற்றலின் தேவையைக் கருதிய காலத்தும் எனப் பின்னோக்கிய பயணம் இலக்கண ஆக்கத்தின் தொடக்க நிலையை ஆய்வதாக அமைகிறது. இலக்கணத் தொடக்கம் கால வெளியில் ஒரு நெடியப் பயணத்திற்கு நம்மைக் கொண்டு செல்லும். மரபு என்ற சொல்லினைத் தொட்டு ஆய்வோமானால் இலக்கண விதிகளும் கோட்பாடுகளும் முன்னோர் மரபைத் தெளிவாகக் கடத்திச் செல்கின்றன. இவ்வகையில் இலக்கண ஆக்கத்தின் அடிப்படையான தேவை எவருக்கு அவசியமானது? அதை யார்? எந்த நோக்கத்திற்கு உருவாக்கினர்? என்ற ஐயப்பாடுகளுக்கு விடைதேடும் நோக்கில் இவ்வாய்வு விரிகிறது.

**மரபு வெளி**

மொழி என்பது யாது? அதன் கட்டமைப்பு எத்தகையது? என்ற வினாக்களுக்கு விடைகளை இலக்கணக் கோட்பாடுகள் இன்றி வேறெந்த தர்க்கத் தீர்வுகளும் கொடுத்து விடாது. பழமையான மொழிகளாகப் போற்றப்படும் தமிழும் வடமொழியும் எவ்வாறு தோன்றியது? என்ற வினாவிற்கு வடமொழியின் புராணமரபு சிவனின் டமருவின் பக்கங்களில் பிறந்தது என்றும் அதைச் சிவனிடம் இருந்து பெற்று எழுதியது பாணினி என்றும் கதைகள் நீள்கிறது. புராணத்தில் மற்றொரு கதையாக சிவனுக்கும் உமைக்கும் நடந்த திருமண நன்னாளில் தேவர்கள் அனைவரும் கயிலையில் கூட வடக்கு தாழ்ந்து தெற்கு உயர்ந்தது என்றும் மீண்டும் உலகம் சமநிலைப் பெற வேண்டி அகத்தியரைத் தெற்கு நோக்கி அனுப்பிய சிவபெருமான் அகத்தியருக்குத் தமிழைக் கற்றுக்கொடுத்தார் என்றும் அவரால் எழுதப்பட்டதே அகத்தியம் எனும் தமிழின் முதல் இலக்கண நூல் என்றும் இன்றளவும் திருவிளையாடற்புராணம், ராமாயணம் ஆகிய புராண நூல்கள் செய்தியாகப் பாடுகிறது. கம்பரும் தமிழைச் சிவனிடத்தில் அகத்தியன் பெற்று தன் நிலத்தவற்கு அளித்ததாகக் கூறுகிறார்.

**உழக்கும் மறை நாலினும், உயர்ந்து உலகம் ஓதும்**
**வழக்கினும், மதிக் கவியினும், மரபின் நாடி,-**
**நிழல் பொலி கணிச்சி மணி நெற்றி உமிழ் செங் கண்**
**தழல் புரை சுடர்க் கடவுள் தந்த தமிழ்-தந்தான்.**

**(கம்பராமாயணம், ஆரண்ய காண்டம், அகத்தியப் படலம், பா.எண்-41)**

இலக்கியங்கள் மொழியின் சிறப்பினை ஏற்றிப் பாடுவது உண்டு, அதிலும் சமய

இலக்கியங்கள் சமயக் கொள்கைகளை ஏற்றி இவ்விதமான புராணக் கதைகளைக் கட்டமைத்து விடுகிறது. நாளடைவில் இதுவே உண்மையெனும் அளவிற்கு வழக்கத்தில் வந்துவிடுகின்றன. அவ் வகையில் இறை நம்பிக்கை, உண்மைநிலை உணர்த்தாது கற்பிதங்களை வளர்க்கின்றன. இதனை வள்ளுவர் வழியில்

> **எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
> **மெய்ப்பொருள் காண்பது அறிவு.**
> **(பொருட்பால் அரசியல் அறிவுடைமை - குறள் எண் 423)**

என ஆய்ந்து மொழியியல் வழியே ஒரு இலக்கணத் தோற்றத்தைக் கண்டு மொழியின் தோற்றத்தை அறிதல் அவசியமாகிறது.

### உந்தி முதலா முந்து வளி தோன்றி

மொழியின் இலக்கணம் அமைப்பு எனும் நிலையிலும், மொழியின் இலக்கியம் அனுபவம் எனும் நிலையிலும் இயங்குவன. அவற்றின் உருநிலை மக்களின் முயற்சியளவிலே தோன்றவல்லன. தொல்காப்பியர் கூறும் பிறப்பியல் செய்தியில் மொழியின் தொடக்கம்

> **உந்தி முதலா முந்துவளி தோன்றித்**
> **தலையினும் மிடற்றினும் நிலைஇப்**
> **(தொல்., எழுத்து., பிறப்பு., பா-1(1-2)**

என்று எழுத்துக்களின் தோற்றத்தை எளிமையாக விளக்குகிறார். ஒலியானது எவ்வாறு விலங்கினங்களிடத்து தோன்றுகின்றன என்பதை விளக்குகிறது. மொழியில் திணைகளான உயர்திணை அஃறிணை எனும் பாகுபாட்டிற்கும் இம்மொழித் தோற்றமே காரணமாகவும் அமையலாம். மனிதனின் சுவாச வழியில் அமைந்துள்ள உறுப்புகளின் முயற்சியால் உருவாகும் ஒலிக் கூறுகளே வெவ்வேறான ஒலியன்களை உண்டாக்குகின்றன. அவ்வொலியன்களின் கூட்டமே சொற்களாகவும் அச்சொற்களின் தொடர்ச்சியே தொடராகவும் அவை கூறப்புகுவது இலக்கியமாகவும் அமைந்தன. இவ்வாறு நோக்கின் மொழியின் தொடக்கம் உந்தி எனலாம். உயிருள்ள அனைத்தும் சுவாசிக்கிறது எனும் பொதுநிலை எனாது, அச்சுவாசத்தை தம் எண்ணத்தைப் பிறருக்கு உணர்த்தும் நோக்கில் மார்பு, கண்டம், தலை எனும் மூவிடத்தில் நிறுத்தி இதழ், நாக்கு, பல், அண்ணம், மூக்கு ஆகிய உறுப்புகளின் வெவ்வேறான அசைவுகளால் எழும் ஓசைகளே எழுத்துக்களின் தோற்றத்திற்குக் காரணமாக அமைகிறது. உலகில் உள்ள அனைத்து மொழிகளுக்கும் தொல்காப்பியனார் கூறும் இவ்விதி பொருந்தும். அம்மொழி பேசும் மாந்தரின் தாள முயற்சி அளவே அம்மொழி கொண்டுள்ள இவ்வொலி எழுத்துக்கள் ஆகும். காலப்பின்னனியில் அவற்றுக்கான வரிவடிவம் தோன்றி இன்றளவும் மாறுபாடைந்துக் கொண்டே வருகிறது. தொல்காப்பியர் காலத்து வரிவடிவமாக மகரம் பெறும் உட்பெறுபுள்ளியும், எகர ஒகரம் மெய்போல் புள்ளி பெற்று குறிலாகும் பண்பும் தொல்காப்பியனார் காலத்து வரிவடிவச் சான்றாகும். மொழி ஆய்ந்த வீரமாமுனிவரும் மொழி உணர்ந்த ஈ.வே.ரா. பெரியாரும் செய்த மொழி சீர்திருத்தம் இன்றையகால வரிவடிவமாகத் தொடர்கிறது. மொழியின் தோற்றம் இயற்கையானது. அது அக்குழு மக்களின் முயற்சியால் உண்டான ஒலிக்கூற்றில் உருவான ஓர் உணர்வு பரிமாற்றக்கருவியே ஆகும்.

### முதல் இலக்கண நூல்

ஒரு மொழி ஒரு மக்கள் கூட்டத்தின் அறிவார்ந்த செயல்களாலும் பண்பாட்டாலும் வேர்க்கொண்டு உருவாகும். அதே வேளையில் மக்களின் வழக்கங்களால்

உருவாகும் சிறந்த செய்திகள் செய்யுளாக மாறுவதுமே ஆகும். பனம்பாரனார் கூறும் மொழி வழக்கு என்பதற்கு பாவலரேறு ச. பாலசுந்தரம் அவர்கள் வழக்காவது யாப்பு நெறியும், பாவுறுப்பாகிய ஓசையமைதியும் புணராத உரைநடையும், சிறுபான்மை வாயுரையுமாம் என்கிறார். பாவலரேறு அவர்கள் காட்டும் யாப்பு, பாவுறுப்பு, உரைநடை, வாயுரை அனைத்தும் ஒரு மொழியின் இலக்கிய வடிவ ஆக்கங்களாகும், இவையே செய்யுளாக வழங்கபெறும் இலக்கியங்களாகும். வழக்கு எனும் பயன்பாட்டு நீட்சியே ஒரு மொழியின் தோற்றத்தையும், அவற்றைப் பயன் படுத்தும் மக்களின் செம்மாந்த நிலையே அம்மொழியின் வளர்ச்சியாகவும், ஒலிக்கூறில் ஏற்படும் புதுமுயற்சி குழூக்குறியால் உண்டாக்கும் புது கிளைமொழியும் என மானுடத்தின் மொழித் தோற்றப்புலத்தை விவரிக்கவல்லன. அம்மொழியின் முதல் இலக்கண நூல் எங்ஙனம் தோன்றிற்று என ஆயுங்கால் அதன் தேவையே அடிப்படையாக அமைகிறது. உணர்வு வெளியில் இலக்கியங்கள் தோன்றி விடுகின்றன. இலக்கணங்கள் அம்மொழியின் அமைப்பினை ஆயப்புகும் போது உருவாகின்றன.

தமிழின் முதல் இலக்கணியாகக் கருதப்படும் அகத்தியர், வடம் விட்டு தென் நிலம் நோக்கி வரும்போது சிவபெருமானிடத்தில் தமிழைக் கற்றும் அம்மொழிக்கு இலக்கண நூல் ஒன்று செய்யவும் துணிந்தார் என்ற கதை வழக்கில் உள்ளது. தான்தோன்றி நிலையில் ஒரு மொழியைத் தோற்றுவித்து ஒரு பெரு நில மக்களுக்கு கற்பித்துவிடவும் முடியாது. அகத்தியர் தமிழ் மொழிகற்று தென் நிலத்து பொதிகையில் நின்றபோது தமிழ் நிலத்தில் மூவகையான கலைகளாகப் பயன்பாட்டில் மொழி இருந்து வந்துள்ளது அதனாலே பன்னீராயிரம் சூத்திரங்களாக இயல், இசை, நாடகம் என முத்தமிழுக்கும் இலக்கணம் வகுத்தார் என்கின்றனர். இலக்கிய ஆசிரியர்கள் படைத்திருந்த முத்தமிழ் இலக்கியங்களைக் கண்டு துய்த்து அகத்தியர் இலக்கணம் வகுத்தார் என்பதே சாலப்பொருந்தும். சித்தராகவும் குறு எனும் அடைகொண்ட ஞான முனியாகவும் வாழ்ந்ததாகக் கருதப்படும் அகத்தியர் சித்த மருத்துவத்திலும் வல்லவராக இருந்திருப்பது அவரைப்பற்றிய புராணக் குறிப்புகளில் வெளிபடுகின்றன.

## பல்கிபெறுகும் இலக்கணம்

இலக்கணத்தின் தேவையும் பயன்பாடும் இருவேறு முனைகளில் தோற்றம் பெறுகின்றன. ஒருமொழியில் இலக்கியங்களைப் படைப்பதற்காக மொழியின் இயல்பொத்து புது இலக்கியம் படைக்க இயலும், இவை நாட்டுப்புறப்பாடல்கள் போன்று தோன்றி வளம் பெறும். மற்றொன்று முன்னிருந்த இலக்கணிகள் காட்டும் விதிகளைப் பயன்படுத்தி இலக்கியம் படைத்தல், ஒரு மொழியின் இலக்கியம் என்பது அம்மொழிபேசும் மக்களின் வாழ்வியல் விழுமியங்களேயாகும். அதனைத் தேடி அடையவும் உய்க்கவும் இலக்கணம் பெரிதும் உதவுகிறது.

இலக்கணிகள் பெரும்பான்மை குருக்களாகவும் அவர்கள் எண்ணிரந்த சீடர்களையும் கொண்டிருந்துள்ளனர். அகத்தியரின் மாணாக்கர் தொல்காப்பியர் முதலான பன்னிருவர் அவர்கள் பன்னிருவரும் படைத்தது பன்னிரு படலமென புறப்பொருள் வெண்பாமாலை கூறுகிறது. முத்தமிழுக்கும் இலக்கணம் கூறும் அகத்தியரின் இயல் பகுதி மட்டும் கற்ற இப்பன்னிருவரும் இயல் இலக்கணிகளாக வாழ்ந்து இயல் பகுதியான எழுத்து, சொல், பொருள் யாப்பு, அணி இலக்கணங்களை படைத்துள்ளனர் எனும் வழக்கு உள்ளது. கால வெள்ளத்தில் அழிவுற்ற இசை, நாடக இலக்கணங்கள் பற்றி இறையனார்

களவியல் உரை, சிலப்பதிகார அடியார்க்கு நல்லார் உரை முதலியவற்றின் வழியாகவும் காணமுடிகிறது.

**முந்நூல் மரபு**

இலக்கணம், நூல் என்று அழைக்கப்படுகிறது, பஞ்சிழைகள் சேர்ந்து தன் இயல்பு விளங்க நூல் ஆகின்றன. மொழியின் அமைப்பை, இயல்பை விளக்கவல்ல இலக்கணங்களும் நூல் எனும் பெயரில் அழைக்கப்படுகின்றன. அவ்வகை நூல் மரபு முதல் நூல், வழி நூல், சார்பு நூல் என மூவகைப்படும் பேற்றை நன்னூலார் விளக்குகிறார்.

**முதல்வழி சார்பென நூன்மூன் றாகும்**
**(நன்., பொதுப்பாயி., நூ.-5)**

இம்மூன்று நூல் நிலையின் இயல்புகளையும் விளக்கப்புகும் நன்னூலார் முதனூலினை

**வினையின் நீங்கி விளங்கிய அறிவின்**
**முனைவன் கண்டது முதனூலாகும்**
**( நன்., பொதுப்பாயி., நூ.-6)**

என விளக்குகிறார். உரைநெறியை விளக்கும் மரபியலில் தொல்காப்பியரும் இம்முதனூல் செய்தியை விளம்ப அதற்கு பாவலரேறு ச. பாலசுந்தரம் அவர்கள் செய்வினையான் வரும் இன்ப துன்பங்களாகிய பயன் தன்னைச் சாராது இயல்பாகவே அதனின் நீங்கிய முற்றறிவுடைய முதல்வன் அருளியது முதனூலாகும் எனத் தம் காண்டிகையில் உரைக்கிறார். ஒரு மொழியின் இயல்பைப் பொதுநிலையில் நின்று அதன் தன்மைகளை எச்சார்புமின்றி விளம்பிய பொருளை எடுத்தியம்பும் முதனூலை பின்பற்றி வருவதாகும். அவ்வகையில் மொழியின் பயன்பாடு மாறுபாட்டையும் காலத்து தோன்றும் வழிநூல்கள் அனைத்தும் முதனூலின் வழியே மொழியின் இயல்பை இலக்கணமாகக் கூறுகின்றன. தாம் கண்ட முடிவின் பயனாகச் சில மொழி இயல்புகளைத் தம் விதியாகச் சேர்த்தும் வழக்கிறந்த சிலவற்றை விடுத்தும் நூல்கள் காலந்தோறும் தோன்றுகின்றன. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி எனப் பல இலக்கண கூறுகளுக்கும் முதனூல் வழிநூலைத் தொடர்ந்து சார்புநூல் பலவும் தோன்றுகின்றன. அவற்றின் பெருக்கம் முதனூல் வழிநூல் சார்புநூல் மூவகையில் அமைந்து பெருகுகின்றன. குரு சீடன் அமைப்பில் காலந்தோறும் இலக்கணிகள் மரபும், மடங்களின் வளர்ச்சியால் உரைமரபும் பெருகி வந்துள்ளன.

**சமய பரப்பும் இலக்கண ஆக்கமும்**

சமயப் பரவலாக்கம் உலகெங்கிலும் நடந்த நடக்கும் ஒன்று. கிறித்துவத்தின் பரவலாக்கம் இன்று உலகெங்கும் நிலை கொண்டிருப்பதைக் காண முடிகிறது. அவ்வாறான சமயத்தைப் பரப்ப வேண்டி வேறுநிலம் புகுந்த பிக்குகளும் பாதிரிகளும் தம் சமயத்தைப் பரப்ப எடுத்துக்கொண்ட ஒரு கருவி மொழி ஆகும். ஒரு புது மொழி ஒரு பூர்வீக மொழியைக் கொண்ட இடத்தில் வேரூன்றி வளர்ந்துவிடாது. அம்மக்களுக்கு அப்புதுமொழி வழி எவ்விதக் கொள்கை களையும் கற்பித்துவிடவும் முடியாது. ஆனால் அப்பூர்வீகமான மொழியைக் கற்றுக்கொண்டு அவற்றின் வழியே அம்மக்களுக்கு தம் கொள்கைகளைக் கற்பித்துவிட முடியும். அவ்வகையில் வேற்றுமொழிக்கற்றலில் அடிப்படையாக இலக்கண கல்வியே அம்மொழியின் இயல்பை உய்த்துணரும் வழியாகும். இவ்வாறாகப் பிக்குகளும் பாதிரிகளும் இலக்கணம் கற்று அதன் பயனையும் உய்த்துள்ளனர். தாம் கற்ற இலக்கணத்தின் வழி புத்திலக்கியங்களையும் அற்றைக் கால மொழி நிலையையும் பயன் பாட்டு வழக்கும் செய்யுளையும் முதன்மைப் படுத்தி இலக்கணங்கள் காலத் தேவையைப் பூர்த்தி செய்துள்ளது. ஆற்றுப்படை, காஞ்சி போன்ற சிற்றிலக்கிய வகைமையில் அமைந்த ஒருசில சிற்றிலக்கிய மரபு மட்டும் நிலைத்த சங்க

காலத்தில் இருந்து இடைக்காலப் பிற்காலப் பிரபந்த இலக்கியங்கள் பெருகிய கால கட்டத்தில் அவற்றுக்கான இலக்கணமாகப் பாட்டியல் நூல்களும் தோன்றி வந்துள்ளன. முதல் வழி சார்பு நிலையில் இலக்கண நூல்கள் தோன்றிடினும், அவற்றை தோற்றுவித்தவர்கள் அவற்றின் தேவையைக் கருதியே தோற்றுவித்த இச்சமயக் கொள்கையுடையவர்களான சமண ஆசிரியர்களே அதிகபடியான இலக்கண நூல்களை எழுதியுள்ளனர். அதற்கு காரணமும் மேற்சொன்ன செய்தியே ஆகும். சமணமும் பௌத்தமும் கிறித்துவமும் பள்ளிகள் மற்றும் பாட சாலைகளை ஏற்படுத்தி அங்கு மாணவர்களுக்குக் கல்வியை ஓதுவித்துள்ளனர். அதன் பிறகு மொழிக்கல்விக்கு அடிப்படையாக இலக்கணமே அமைந்துள்ளது. மடங்களும் இலக்கணங்களைப் படைத்தும் உரைகள் பல எழுதியும் தமிழ்ப் பணி ஆற்றியுள்ளது. பேராசிரிரியர் கா.சிவதம்பியும் இச்சமயப் பணியின் பயனை "நமக்குக் கிடைத்துள்ள மிகப் பெரிய இலக்கண நூல்கள் சமண பௌத்த மரபுகளைச் சார்ந்தவையாகும். தொல்காப்பியம், (நன்னூல், வீரசோழியம், நிகண்டுகள் கூட) சமண பௌத்த கையளிப்புகளே" (ப.24. தமிழ் இலக்கியப் பேறு - ஓர் அறிமுகக் குறிப்பு, புதிய தமிழ் இலக்கிய வரலாறு) என்கிறார்.

## தொகுப்புரை

இலக்கணம் மொழியின் இயக்கத்தால் வழக்கும் செய்யுளுமாகத் தோன்றுவன. அவற்றினை உணர்ந்து இலக்கணத்தை உருவாக்கும் இலக்கணிகள் பெரும்பாலும் வேற்றுநிலத்தவராக வேற்று சமயத்தவராக இருந்துள்ளனர். அவர்களால் உருவான முதல் இலக்கணங்கள் சீடர்களின் மூலம் மரபினைப் பின்பற்றி பலவாக எழுதப் பட்டிருக்கின்றன. அவற்றின் வரலாற்றினை ஆயும்போது இன்னும் நீளும். புராணக் கதைகளின் பின்னணி இலக்கணங்களின் தோற்றம் அனைத்தும் மொழியியல் நோக்கில் ஆய்வதாக அமைதல் அவசியமாகிறது. தொல்காப்பியம் இன்றளவில் கிடைக்கபெறும் முழு இயல் இலக்கணம் ஆகும். ஆனால் அதில் பொதிந்துள்ள முந்நூல் வாய்ப்பாடுகள் தொல்காப்பியத்தை ஒரு வழிநூலாகக் காட்டுகிறது. அதே வேளையில் தொல்காப்பியத்திற்கு முதல் நூலாவது அகத்தியமே என்பதற்குச்சான்றுகள் இல்லை தீரண தூர்மக்கினி எனும்பெயர்களைச் சூட்டி ஒரு புது வரலாற்றை எழுதி விடுவது வரலாற்றில் ஏற்படும் பிழையாகவே கருதப்படும். இலக்கணத்தேவை ஏற்பட்ட போது படைக்கப்பட்ட மூலநூல்கள் ஆசிரியர்களின் சீடர்களால் பலகாலம் பல்கிப் பெருகி வளர்ந்துள்ளன. இன்னும் வளரும்.

## துணைநூற்பட்டியல்

1. இறையனார் களவியல் என்னும் இறையனார் அகப்பொருள் - நக்கீரர் உரை. திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம் -1953.
2. இராமசுப்ரமணியம்.வ.த. - கம்ப ராமாயணம் மூலமும் உரையும் (ஆரணிய காண்டம்) திருமகள் நிலையம் - 2009.
3. உ.வே.சா. - சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும் அடியார்க்கு நல்லாருரையும், உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம் -2013.
4. சிற்பி பாலசுப்பிரமணியம், நீல பத்மநாபன் (ப.ஆ) - புதிய தமிழ் இலக்கிய வரலாறு, சாகித்திய அகாதெமி வெளியீடு, மூன்றாம் பதிப்பு -2019.
5. தாமோதரன்.அ (ப.ஆ.) - இறையனார் களவியல் - செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், 2013.
6. வேங்கடசாமி நாட்டார் ந.மு. - திருவிளையாடற் புராணம்: மூலமும்

உரையும், தீபம் வெளியீடு, 2024.
7. நாமக்கல் கவிஞர் உரை - திருக்குறள், பூம்புகார் பதிப்பகம், 2010.
8. பாவலரேறு பாலசுந்தரம். ச. - தொல்காப்பியம் ஆராய்ச்சிக் காண்டிகையுரை, 5 தொகுதிகள், பெரியார் பல்கலைக்கழகம், சேலம், பிப்ரவரி 2012.
9. மோசசு பொன்னையா - நன்னூல் ஆராய்ச்சித் தெளிவுரை சொல்லதிகாரம் - சீயோன் பதிப்பகம், 1971.